aglasem.com

FOR KARNATAKA CLASS 12 PREPARATION

Karnataka 2nd PUC Model Question Paper 2027 for Tamil (Paper 2)

EXAM	YEAR	TYPE	SUBJECT
Karnataka Class 12	2027	Sample Paper	Tamil

GOVERNMENT OF KARNATAKA
KARNATAKA SCHOOL EXAMINATION AND ASSESSMENT BOARD
6TH CROSS, MALLESHWARAM, BENGALURU - 560 003
2026 -27 II PUC MODEL QUESTION PAPER - 2

SUBJECT:TAMIL(04) **MAXIMUM MARKS: 80**

TIME: 03 HOURS **NUMBER OF QUESTIONS: 55**

மாணவர்களின் கவனத்திற்கு

1. கையெழுத்து தெளிவாகவும், அழகாகவும் இருக்க வேண்டும்.

2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினா எண்களைச் சரியாக எழுத வேண்டும்.

3. கட்டுகரை ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்.

பகுதி - ஒன்று

I. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக **10X1=10**

1. கல்லாத மனதில் காணாமல் இருப்பவன்

(அ) மனிதன் (ஆ) அரகன்

(இ) புனிதன் (ஈ) இறைவன்

2. பல மொழிகளால் நிறைந்த நாடு

(அ) கொரியா (ஆ) இந்தியா

(இ) இங்கிலாந்து (ஈ) அமெரிக்கா.

3. இருவினைகள் யாவை?

அ. நல்லனை, தீவீனை ஆ. நன்று , தீது

இ. நற்றிணை, குறுந்தொகை ஈ. உயர்திணை ,அஃறிணை

4. நும் பாடப்பகுதியில் அமைந்துள்ள புறநானூற்றுப் பாடலை இயற்றியவர்யார்?

அ . வெண்ணிக் குயத்தியார் ஆ . நல்லாதனார்

இ . ஔவையார் ஈ . தாயுமானவர்

5. தந்தை பெரியார் பிறந்த ஆண்டு

(அ) 1879 (ஆ) 1917

(இ) 1924 (ஈ) 1927

6. மக்கள் தங்களின் ஆழமான நம்பிக்கையை எதன் மீது வைத்திருந்தார்கள்.

(அ) ஆபரணாங்கள் (ஆ) வேலை

(இ) பணம் (ஈ) தெய்வம்

7. கருநாடகத்தில் பக்தி இயக்கத்தை முதலில் தொடங்கியவர்

(அ) மீராபாய் (ஆ) துக்காராம்

(இ) பசவண்ணர் (ஈ) ஆய்தக்கி மாரய்யா.

8. தத்துவத்தை விட மேலானது எது என்று பைலார்க்கஸ் களிறுகிறார்?

அ. ஒரு கிண்ணம் திரட்சை ரசம் ஆ. ஒரு கிண்ணம் சோறு

இ. ஒரு கிண்ணம் பால் ஈ. ஒரு கிண்ணம் பழ ரசம்

9. சரசுவின் மகனின் பெயர் என்ன?

(அ) கணேசன் (ஆ) முருகேசன்

(இ) புவனேசன். (ஈ) அசோகன்

10. செட்டியார் வேண்டிய தெய்வத்தின் பெயர்

(அ) முருகன் (ஆ) சிவன்

(இ) அல்லா (ஈ) இயேசு

II. கோடிட்ட இடங்களை நிரப்புக: **5X1=5**

11. ஞாலம் என்பதன் பொருள்..... (உலகம்/வானம்)

12 மதம் என்பதன் பொருள் ..... (நெறி/நெரி)

13. மூவரின் காலையும் ஒரு ..... பெண் கழுவினாள் . (யவன / யூத)

14. சாமியாரின் அகராதியில் "பெலஹீனம் என்றால்..... (கோபம், மகிழ்ச்சி)

15. தோப்புல செருப்பு தைக்கிற ஒரு ..... இருந்தான். (ராமன் / சங்கிலி)

பொருத்துக: **5X1=5**

16.	இலட்சணம்	- விழா
17.	உற்சவம்	- அழகு
18.	கும்பாபிசேகம்	- மக்கள்
19.	சம்பிரதாயம்	- குடமுழுக்கு
20.	ஜனங்கள்	- தொன்மரபு

பகுதி - இரண்டு

பிரிவு - 1

அ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக: 2X2=4

21. மணிமேகலை குறிப்பிடும் பாரமிதை என்பதன் பத்து வகைகள் யாவை?
22. வெள்ளத்தனைய மலர் நீட்டம் என வள்ளுவர் எதனை ஒப்புமை படுத்துகிறார்?
23. நான் ஒரு மரமாகப் பிறந்திருந்தால் கவிதையில் நட்பு எவ்வாறு வர்ணிக்கப்படுகிறது?

பிரிவு - 2

ஆ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக 2X2=4

24. பசவண்ணரின் பக்தி இயக்கத்தில் பங்காற்றிய வசனகாரர்களைக் குறிப்பிடுக.
25. அறிவு ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது என்பது குறித்து ஜீவா அவர்கள் கூறுவதை எழுதுக.
26. இரக்க குணத்திற்குரிய இராகங்களின் பெயர்களை எழுதுக.

பிரிவு - 3

இ. ஏதேனும் ஒரு வினாவிற்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக 1X2=2

27. கோபே நகரில் யோஷிகியின் கடை தீப்பற்றி எரிந்ததைப் பற்றி ஹோட்டல் பணிப்பெண் ஜானகிராமனுக்குக் கூறிய செய்திகளை எழுதுக.
28. பண்ணக்காரனின் கதையைப் பற்றி செம்மான் கிழவன் சொன்ன பொழுது பண்ணக்காரன் எவ்வாறு சமாளித்தான்?

பகுதி – மூன்று

எவையேனும் மூன்று வினாக்களுக்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக 3X3=9

29. “கடனரி காட்சியவர்”
30. 'மானுண் டெஞ்சிய கலிழி நீரே'
31. "சென்னையைச் சேர்ந்த கடற்கரையில் பல குப்பங்கள் உண்டு "
32. "சமூகத்தில் புதியதோர் தாக்கத்தையும் நம்பிக்கையையும் உருவாக்கியது.
33. "அடியும் பட்டு, பட்டினியும் கிடந்து சாகணுமா நான்?"
34. "அட நன்றிக் கெட்டவனே உன்னை வளர்த்து ஆளாக்க என்ன பாடுபட்டிருப்பேன்!"

பகுதி - நான்கு

பிரிவு - 1

அ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை எழுதுக **2X4=8**

35. வெண்ணிக் குயத்தியார், வெண்ணிப் பறந்தலைப் போரைப் பாடும் பாங்கினைப் புலப்படுத்துக.
36. அதி வீரராம பாண்டியர் திருக்கருவை இறைவனிடம் கொடுத்ததும் - பெற்றதும் எவையெவை? விவரி.
37. பொங்கல் வரும் நேர்த்தியை கவிஞர் மு மேத்தா கூறும் விவரத்தை எழுதுக
38. இராமலிங்க அடிகள் சிவபெருமானை பற்றி புகழ்ந்து கூறும் கருத்துக்களை எழுதுக

பிரிவு - 2

ஆ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை எழுதுக **2X4=8**

39. வைக்கம் போராட்டம் - குறிப்பு வரைக.
40. சோழர்காலத்து ஓவியங்களைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.
41. இசை எழுப்பும் ஐந்து வகைக் கருவிகளை விளக்கி எழுதுக
42. கருநாடகத்தின் பக்தி இயக்கம், மற்ற பக்தி இயக்கங்களிலிருந்து வேறுபட்டு செயலாற்றிய தன்மைகளை விளக்கி எழுதுக

பிரிவு - 3

இ. ஏதேனும் ஒரு வினாவிற்கு ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை எழுதுக **1X4=4**

43. "வயதான காலத்தில் அவரை நல்லா வைச்சிருக்க வேண்டாமா?" என்று கேட்ட சாமியாருக்கு வேலாயுதம் கூறியவற்றை எழுதுக.
44. அலுவலகம் சென்று வந்த பிறகு முருகேசன் செய்யும் செயல்களை வரைக.

பகுதி - ஐந்து

பிரிவு - 1

அ. கீழ்காணும் பாடலின் பொருளை எழுதி அணியை விளக்குக **1X4=4**

45. "சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற் பட்டுப்பா டூன்றும் களிறு"'

பிரிவு - 2

ஆ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக **4X2=8**

46. சேர்த்து எழுதுக

(அ) திரு + அருள்

(ஆ) நேற்றும் + இன்றும்

47. பிரித்தெழுதுக

(அ) வேண்டன்னை

(ஆ) தங்கமுகம்

48. எதிர்ச்சொல் எழுதுக

(அ) மறதி X

(ஆ) புலர்தல் x

49. இலக்கணக் குறிப்பு எழுதுக

(அ) பெருமை X

(ஆ) வேண்டும் x

50. கீழ்வரும் தொடர்களை நல்ல தமிழில் எழுதுக:

(அ) மார்னிங் பஸ்ட் கிளாஸ் மிஸ் பண்ணிட்டேன்.

(ஆ) வெஜிடபிள் ஜூஸ் சூப்பரா இருக்கு.

51. கீழ்வரும் சொற்களின் பொருளுணர்ந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக:

(அ) செல்வம்

(ஆ) காவல் தெய்வம்

பகுதி - ஆறு

பிரிவு - 1

அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றிற்கு கட்டுரை வடிவில் விடை எழுதுக **1X5=5**

52. உனக்கு பிடித்த சமூகத் தலைவரைப் பற்றி கட்டுரை வரைக.

அல்லது

53. கணிப்பொறியின் நன்மைகள் குறித்து கட்டுரை வரைக.

பிரிவு - 2

ஆ. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு விடை எழுதுக **1X4=4**

54. மழையினால் மின் கசிவு ஏற்பட்டு இருப்பதை குறித்து உரிய அதிகாரிக்கு கடிதம் வரைக.

அல்லது

55. "பந்திக்கு முந்தி படைக்கு பிந்தி" என்ற பழமொழியை விளக்கி வாக்கியத்தில் அமைத்து எழுதுக.